**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 10.12.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 09.12.2020 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் விநியோக லாரி TN 28 BZ 9021 மற்றும் TN 28 BZ 8975 வாகனங்களின் தகுதிச்சான்று 30.12.2020 அன்று முடிவடைகிறது. தகுதிச்சான்று பெற வாகன பழுதுகளை அசோக் லேலண்ட் நிறுவனமான சேலம் டிவிஎஸ் பணிமனையில் பழுது நீக்கம் செய்யவும், அதற்கான செலவினங்களை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், தகுதிச்சான்று பெற மத்திய அரசால் அங்கீகாரம் பெற்ற வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் பணிக்கு 16.11.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனம் பெயர், முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | PKD வாகன புகை பரிசோதனை நிலையம், இராசிபுரம். | ரூ. 4800 x 2 = 9600/- |
| 2. | TLS ஸ்டிக்கர்ஸ், நாமக்கல். | ரூ. 4950 x 2 = 9900/- |
| 3. | PKD ஸ்டிக்கர்ஸ், இராசிபுரம். | ரூ. 4900 x 2 = 9800/- |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள PKD வாகன புகை பரிசோதனை நிலையம், இராசிபுரம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) குடிநீர் லாரிகள் தகுதிச்சான்று பெற ஆகும் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4291/20/இ2)

**தீர்மானம் எண். 911**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் வார்டு எண். 7, 8, 15 மற்றும் 24 ஆகிய பகுதிகளுக்கு உப்பு நீர் குழாய் அமைக்கும் பணிக்கு ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் –மதிப்பீட்டைவிட 0.16% குறைவு.

2) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.74% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.16% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4269/20/இ2)

**தீர்மானம் எண். 912**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் வார்டு எண். 1, 2, 8, 11, 13 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் உப்பு நீர் குழாய் அமைக்கும் பணி ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.24% குறைவு.
2) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 1.64% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி (0.24%) அளித்துள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4270/20/இ2)

**தீர்மானம் எண். 913**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் வார்டு எண். 23 மற்றும் 26 சின்டெக்ஸ் டேங்க் மாற்றி அமைக்கும் பணி ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், பட்டணம் – மதிப்பீட்டைவிட 8.40% அதிகம்
2) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.15% குறைவு.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி (0.15%) அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4271/20/இ2)

**தீர்மானம் எண். 914**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் வார்டு எண். 20, 21 மற்றும் 27 ஆகிய பகுதியில் பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்து இணைக்கும் பணி ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.35% குறைவு.
2) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 3.30%அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.35%) அளித்துள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4272/20/இ2)

**தீர்மானம் எண். 915**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் ஆழ்துளைக் கிணறுகளிலுள்ள சிறு மின் விசைப்பம்பு மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள நீர்முழ்கி மின் மோட்டார்கள் சரி செய்யும் பணி ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27.11.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், பட்டணம் – மதிப்பீட்டைவிட 4.43% அதிகம்
2) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.26%குறைவு.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.26%) அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4470/20/இ2)

**தீர்மானம் எண். 916**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள தாங்கு சுவர்களின்மீது மேற்கூரை அமைத்து (Light Roof-GI sheet) மின் வசதி செய்யும் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு, இரண்டாம் அழைப்பாக 13.11.2020 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என்.செல்லப்பன்,ஒப்பந்ததாரர், 27,வி.நகர் ரோடு எண்.17–மதிப்பீட்டைவிட 0.14% குறைவு.
2) திரு ஜே.ரவிசந்திரன்,ஒப்பந்ததாரர்,ஆர்.கவுண்டம்பாளையம்–மதிப்பீட்டைவிட 1.22% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.14% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.14% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3218/19/இ1)**

**தீர்மானம் எண். 917**

அனுமதிக்கப்பட்டது.

**( 8 )** இராசிபுரம் நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–21–இன்கீழ் வார்டு எண். 1 மேற்கு காலனி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடத்திற்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்யும் ரூ. 5,00,000/– மதிப்பீட்டுப் பணிக்கு, 04.12.2020–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.01 % குறைவு.
2) திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.90 % அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01 % குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4527/20)**

**தீர்மானம் எண். 918**

அனுமதிக்கப்பட்டது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள தாங்கு சுவர்களின்மீது மேற்கூரை அமைத்து (Light roof-GI sheet) மின் வசதி செய்யும் பணிக்கு இரண்டாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 3896/– பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/1335/20)**

**தீர்மானம் எண். 919**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் கோரிக்கை எண். 34 மற்றும் அரசாணை எண். G.O.(RT) No. 165, நாள் 30.07.2018–இன்கீழ் அறிவிக்கப்பட்ட இராசிபுரம் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம் ஒன்றியங்களிலுள்ள 358 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இராசிபுரம் நகராட்சி உள்ளாட்சி மன்ற தீர்மானம் எண். 529 நாள் 07.03.2019–இன்படி சேர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கூட்டுக்

குடிநீர் திட்டம் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள 823 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

மேற்காணும் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கிய உடன் தற்பொழுது பயனில் உள்ள இராசிபுரம்–இடைப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து இராசிபுரம் நகராட்சியை விடுவித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** புதிய குடிநீர் திட்டத்தில் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதின்பேரில் தற்போது பயனில் உள்ள இராசிபுரம்–இடைப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து இராசிபுரம் நகராட்சியை புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கியவுடன் விடுவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1742/18)

**தீர்மானம் எண். 920**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தின் தகுதி காலத்தினை புதுப்பிக்க, பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 400000/– (ரூபாய் நான்கு இலட்சம்) மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 400000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
இ) பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(இ1/4834/20)

**தீர்மானம் எண். 921**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.